# செம்பாக்கம் நகராட்சி
## நிர்வாக அறிக்கை 2018 – 19

### அமைப்பும் நிர்வாகமும்

**ஆட்சி எல்லை:**

ராஜகீழ்பாக்கம், செம்பாக்கம் மற்றும் கௌரிவாக்கம் ஆகிய மூன்று வருவாய் கிராமங்களை ஒன்றாக சேர்த்து அரசாணை (நிலை) எண்.68 நகராட்சி நிர்வாகம் மற்றும் (ந.நி.5) குடிநீர் வழங்கல் துறை நாள் 16.5.2013 ன்படி செம்பாக்கம் பேரூராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. நகராட்சி 6.25 சதுர கிலோ மீட்டர் பரப்பளவை கொண்டதாக உள்ளது.

**மக்கள் தொகை:**

இந்நகராட்சி மக்கள் தொகை **2011**ம்ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி **45356**. இதில் 22705 பேர் ஆண்கள், 22651 பேர் பெண்கள் ஆவர். இது 2001 ஆம் ஆண்டின் மொத்த மக்கள் தொகையைவிட 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை 93 சதவீதம் கூடுதல் அடைந்துள்ளது.

**நகராட்சி அலுவலர்கள்:**

**ஆணையர்:**

அறிக்கையாண்டில் திருமதி. மு. ரா. வசந்தி, எம்.ஏ., ஆணையாளர் அவர்கள் 1.4.2018 முதல் 31.3.2019 வரை செம்பாக்கம் நகராட்சியின் ஆணையாளராக பணிபுரிந்து வருகிறார்.

**பொதுப்பிரிவு:**

அறிக்கையாண்டில் பொது பிரிவில் கீழ்காணும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணிபுரிந்தனர்.

| வ. எண். | பெயர் | பதவி | பதவி காலம் |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். ஏழுமலை | மேலாளர் | 2.5.2018 முதல் 4.3.2019 வரை |
| 2 | திரு. ஆர். பழனி | மேலாளர் | 5.3.2019 முதல் 31.3.2019 வரை |
| 3 | திரு. க. ஜானகிராமன் | கணக்காளர் | 27.4.2018 முதல் 31.3.2019 வரை |
| 4 | திரு. வே. கிருபாகரன் | வருவாய் ஆய்வாளர் | 27.4.2018 முதல் 31.3.2019 வரை |

**பொறியியல் பிரிவு:**

அறிக்கையாண்டில் பொறியியல் பிரிவில் கீழ்காணும் அலுவலர்கள் மற்றும் பணியாள்ரகள் பணிபுரிந்தனர்.

| வ. எண். | பெயர் | பதவி | பதவி காலம் |
|---|---|---|---|
| 1 | திரு. ஆசிர்வாதம் | பொறியாளர் (பெப) | 1.4.2018 முதல் 10.5.2018 வரை |
| 2 | திரு.எஸ். சண்முகம் | பொறியாளர் | 11.5.2018 முதல் 31.3.2019 வரை |
| 3 | திரு. சரவணன் | பொது பணி மேற்பார்வையாளர் (பொ) | 1.4.2018 முதல் 1.5.2018 வரை |

| | | | |
|---|---|---|---|
| 4 | திரு. ஜெ. வெங்கடேசன் | பொது பணி மேற்பார்வையாளர் | 2.5.2018 முதல் 31.3.2019 வரை |
| 5 | திரு. எம். அண்ணாமலை | பணி ஆய்வாளர் | 11.5.2018 முதல் 31.3.2019 வரை |
| 6 | திரு. மா.ஜெயக்குமார் | ஓட்டுநர் | 27.4.2018 முதல் 31.3.2019 வரை |
| 7 | திரு. இரா. மோகன் | ஓட்டுநர் | 12.9.2018 முதல் 31.3.2019 வரை |

**சுகாதார பிரிவு:**

அறிக்கையாண்டில் சுகாதார பிரிவில் கீழ்காணும் அலுவலர்கள் பணிபுரிந்தனர்.

| வ. எண். | பெயர் | பதவி | பதவி காலம் |
|---|---|---|---|
| 1 | திரு. கோவிந்தராஜ் | துப்புரவு ஆய்வாளர் (பொ) | 1.4.2018 முதல் 14.5.2018 வரை |
| 2 | திரு. மு. நாகராஜ் | துப்புரவு ஆய்வாளர் | 15.5.2018 முதல் 31.3.2019 வரை |

**நகர் மன்றம்**

அறிக்கையாண்டில் நகராட்சி ஆணையாளர் மற்றும் தனி அலுவலரால் நடத்தப்பட்ட மன்ற கூட்டம் ஜனவரி 2018 முதல் டிசம்பர் 2018 வரையான காலத்தில் 12 சாதாரணக் கூட்டங்களும் ஒரு அவசர கூட்டமும் நடைபெற்றன. அவற்றில் 250 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நிர்வாகம்**

இந்நகராட்சிக்கு அரசாணை (நிலை) எண்.40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.ப.1) நாள் 19.4.2018ன் படி புதியதாக பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவுகளின் படி பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

| வ. எண். | பணியிடத்தின் பெயர் | ஏற்கனவே உள்ள பணியிடங்கள் | புதியதாக தோற்றுவிக்கப் பட்ட பணியிடங்கள் |
|---|---|---|---|
| 1. | ஆணையாளர் | | 1 |
| 2. | மேலாளர் | | 1 |
| 3. | உதவியாளர் | | 1 |
| 4. | நகராட்சி பொறியாளர் | | 1 |
| 5. | நகரமைப்பு ஆய்வாளர் | | 1 |
| 6. | சுகாதார ஆய்வாளர் | | 1 |
| 7. | பொது பணி மேற்பார்வையாளர் | | 1 |
| 8. | பணி ஆய்வாளர் | | 1 |
| 9. | வருவாய் ஆய்வாளர் | | 1 |
| 10. | வருவாய் உதவியாளர் | 1 | 0 |
| 11. | இளநிலை உதவியாளர் | 1 | 2 |
| 12. | துப்புரவு பணியாளர்கள் | 22 | 0 |
| 13. | அலுவலக உதவியாளர் | | 1 |

| | | | |
|---|---|---|---|
| 14. | பதிவறை எழுத்தர் | | 1 |
| 15. | ஓட்டுநர் | | 2 |
| 16. | புள்ளி விவர தொகுப்பாளர் | | 1 |
| | மொத்தம் | 24 | 16 |

மேலும், இந்நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் பேரூராட்சியாக இருந்த காலத்திலிருந்து தினக்கூலி அடிப்படையில் 12 பணியாளர்களில் ஒரு நபர் கணினி இயக்குபவராகவும், 11 பணியாளர்கள் தெருவிளக்கு, குடிநீர் மற்றும் பொது சுகாதார பணிகளில் பணிபுரிந்து வருகின்றனர்.

**<u>கணினி மயமாக்கல் மற்றும் மின்னனு நிர்வாகம்</u>**

இந்நகராட்சியின் அனைத்து பிரிவு பணிகளும் கணிணியின் மூலம் (Urban Tree Information System) ஒருங்கிணைந்த வலைதள பதிவு மூலம் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>பொது சுகாதாரம்</u>**

இந்நகராட்சியில் நகர் நல அலுவலர் பணியிடம் ஏதும் இல்லை. துப்புரவு ஆய்வரே சுகாதார பணிகளை கவனித்து வருகிறார். தோற்றுவிக்கப்பட்ட மொத்தம் 22 பணியிடங்களில் 19 பணியிடங்களில் துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். 3 பணியிடங்கள் காலியாக உள்ளது. (இவற்றில் ஒரு பணியிடம் பணி மாறுதல் செய்யப்பட்டது, ஒரு பணியிடம் ஓட்டுநராக பதவி உயர்வு வழங்கப்பட்டது, ஒரு பணியிடம் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றதால் 1.6.2018 முதல் காலியாக உள்ளது).

**<u>பிறப்பு மற்றும் இறப்பு</u>**

அறிக்கையாண்டில் ஜனவரி 2018 முதல் டிசம்பர் 2018 வரையான காலத்திற்கு 1149 பிறப்புகளும், 187 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டது.

**<u>துப்புரவு பணிகள்</u>**

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் அனுமதிக்கப்பட்ட 22 துப்புரவு பணியாளர்கள் 11 தினக்கூலி பணியாளர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 130 பணியாளர்களை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதல் நிலை சேகரிப்பிற்கு Tata Ace – 6, Battery Operated Vehicles – 13, Tricycles - 30 மற்றும் இரண்டாம் நிலை சேகரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 எண்ணம் காம்பாக்டர் வாகனங்களும், 1 மண் வாரி இயந்திரமும், 31 எண்ணிக்கை தள்ளு வண்டிகளும், 80 எண்ணிக்கை காம்பாக்டர் குப்பை தொட்டிகளும் பயன்படுத்தப்பட்டு வரப்படுகிறது.

இந்நகராட்சியில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 24 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் சேகரிக்கப்பட்டு, சர்வே எண்.1/1 செம்பாக்கத்தில் உள்ள உரக்கிடங்கில் 3.9.2015 வரை கொட்டப்பட்டு வந்தது. தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தென் மண்டல கிளையின் உத்திரவின்படி மேற்படி உரக்கிடங்கில் திடக்கழிவுகள் கொட்டப்படுவது நிறுத்தப்பட்டு, 4.9.2015 முதல் இந்நகராட்சியின் திடக்கழிவுகளை பல்லவபுரம் தாம்பரம் வேங்கடமங்கலம் கூட்டு திடக்கழிவு திட்டத்திற்கு தாம்பரம் நகராட்சிக்கு சொந்தமான கன்னடபாளையம் திடக்கழிவு மாற்று நிலையம் வாயிலாக கொண்டு செல்லப்பட்டு, அங்கு விஞ்ஞான முறையில் திடக்கழிவுகள் மேலாண்மை செய்யப்படுகிறது. தங்போது 2 MCC மற்றும் 6 OCC, இடங்களில் பசுமை

உரக்குடில்கள் ஏற்படுத்தப்பட்டு அதில் நாளொன்றுக்கு மக்கும் குப்பைகள் 10 MT அளவிற்கு உரமாக்கும் பணி நடைப்பெற்று வருகிறது. மேலும் 180 சதுர மீ அளவில் பிளாஸ்டிக் கழிவுகள், மருத்துவ கழிவுகள், மின்னனு கழிவுகள் சேகரிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டு மறு சுழற்சி மறு பயன்பாட்டுக்கு அல்லாத கழிவுகளான எரியூட்டக்கூடிய கழிவுகளை (RRC) அல்ட்ரா டெக் நிறுவனத்திற்கு அனுப்பும் பணியும், நாளொன்றுக்கு இரண்டு டன்கள் வீதம் வாரம் இரண்டு நாட்கள் (புதன், சனி) மறு சுழுற்ச்சி பிளாஸ்டிக் கழிவுகளை விற்பனை செய்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கே வழங்கப்பட்டு வருகிறது.

**<u>கொள்ளை நோய் விவரங்கள்</u>**

அறிக்கை ஆண்டில் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டவர் விவரம்

| வ.எண். | நோயின் பெயர் | பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | காலரா | இல்லை |
| 2 | அம்மை | |
| 3 | பிளேக் | |
| 4 | சீதபேதி | |
| 5 | வயிற்றுக் கடுப்பு | |
| 6 | காய்ச்சல் | |
| 7 | சுவாசப்பை சம்மந்தமான நோய் | |
| 8 | இன்ஃப்ளுன்சா மற்றும் நாய்கடி | |
| 9 | டெங்கு காய்ச்சல் | |

**<u>வருவாயினம்</u>**

அறிக்கையாண்டில் 1.4.2018 முதல் அரசாணை எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 19.7.2018 மற்றும் அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 26.7.2018ன் படி சொத்து வரி சீராய்வு பணி மேற்கொள்ளப்பட்டது. 2017-18ம் ஆண்டு சொத்து வரி கேட்பு தொகை ரூ.221.89 இலட்சத்திலிருந்து சொத்து வரி சீராய்வு பணி மேற்கொண்ட வகையில் கூடுதல் கேட்பு தொகையாக 2018-19ம் நிதியாண்டிற்கு ரூ.362.57 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இக்கேட்பு தொகையில் ரூ. 294.40 இலட்சம் வசூல் செய்யப்பட்டது. மேலும், தொழில் வரி தலைப்பின் கீழ் ரூ.29.44 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது. நூலக வரியாக சொத்துவரி பொது காரியத்திற்காக பிரிக்கப்படும் தொகையில் ரூபாய்க்கு 10 பைசா வீதம் மாவட்ட நூலக அலுவலகத்திற்கு 31.3.2019 முடிய செலுத்தப்பட்டுள்ளது.

**<u>தெருவிளக்கு</u>**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் தெருவிளக்கு மொத்தம் 4620 தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதியின் பேரில், தெருவிளக்குகளை தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்காகும் ஆண்டு செலவினம் ரூ.77.00 இலட்சம் ஆகும்.

| Sl. No | Item Description | No. of Lights |
|---|---|---|
| 1 | 40W Tuble Lights | 694 |
| 2 | 85 W CFL | 1404 |

| | | |
|---|---|---|
| 3 | 27 W CFL | 61 |
| 4 | 150 W SV Lamps | 115 |
| 5 | 250 W SV Lamps | 1215 |
| 6 | 2x36W TS Energy Saver Lights | 125 |
| 7 | 4x24W TS Energy Saver Lights | 235 |
| 8 | LED 50w | 102 |
| 9 | LED 36w | 96 |
| 10 | LED 18w | 240 |
| 11 | 250 W MHL | 148 |
| 12 | 400 W MHL | 162 |
| 13 | 150 W MHL | 23 |
| | Total | 4620 |

**சாலைகள்**

இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் சாலைகளின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | சாலையின் விவரம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | தார் சாலை | 64.696 |
| 2 | சிமெண்ட் சாலை | 34.203 |
| 3 | பேவர் பிளாக் சாலை | 3.518 |
| | மொத்தம் | 102.417 |

மேலும் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 3.740 கி.மீ நீளத்திற்கு மாநில நெடுஞ்சாலை அமைந்துள்ளது.

**மழைநீர் வடிகால்வாய்**

இந்நகராட்சியில் பராமரிக்கப்படும் மழைநீர் வடிகால்வாய்களின் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | வடிகால்வாய் விவரம் | நீளம் (கி.மீ) |
|---|---|---|
| 1 | திறந்த வெளி கால்வாய் | 31.525 |
| 2 | மூடியுடன் கூடிய கால்வாய் | 7.00 |
| | மொத்தம் | 38.525 |

**கல்வெர்டுகள்**

இந்நகராட்சியில் மொத்தம் 147 கல்வெர்டுகள் பராமரிப்பில் உள்ளது.

**குடிநீர்**

நகராட்சியில் உள்ள 12 எண்ணிக்கை மேல் நிலை நீர் தேக்கத் தொட்டிகள் மூலம் பொது மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொது குழாய்கள் மூலம் நாள்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 14 எண்ணிக்கையிலான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோக இயந்திரங்கள் 14 வார்டுகளில் அமைக்கப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**பாதாள சாக்கடை திட்டம்:**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் மற்றும் பாதாள சாக்கடை திட்டத்தினை சென்னை குடிநீர்

வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம் மூலம் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நகர் மன்ற ஒப்புதலுடன் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு பிரேரணை சமர்பிக்கப்பட்டுள்ளது.

**பூங்கா:**

இந்நகராட்சியில் மொத்தம் **31** எண்ணிக்கை பூங்காக்கள் பராமரிப்பில் உள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:

| Sl No. | Ward No | Name of the Park & Location | Survey Number |
|---|---|---|---|
| 1 | 1 | Baghiyam Nagar | 6/18. |
| 2 | 1 | Maruthi Nagar | 173/1. |
| 3 | 1 | Bavananthiar St Park | 58/1, 61, 62 |
| 4 | 3 | Heritage Jeyandra Nagar 1 | 149.000 |
| 5 | 3 | Heritage Jeyandra Nagar 2 | 165/2a2 |
| 6 | 3 | Heritage Jeyandra Nagar 3 | 33/2b,1b |
| 7 | 3 | VGP Ponn Nagar | 2/1,2,3. |
| 8 | 3 | Samraj Nagar | 143, 139, 144 |
| 9 | 3 | Santhanammal Nagar | 3/1. |
| 10 | 4 | Santhi Nagar Main Road | 69 |
| 11 | 4 | Vembuliamma koil Street | 38 |
| 12 | 4 | Sivagami Nagar | 73/2. |
| 13 | 5 | Abdul Kalam Park, Tellus Avenue Ph I | 67/1, 68/2a |
| 14 | 5 | Bharathiar Park, Tellus Avenue PH I | 64/4,65/5 |
| 15 | 5 | Sarajoni Park, Tellus Avenue PH I | 63/2a |
| 16 | 5 | Abdul Kalam Street, Tellus Avenue Ph II | 104/7, 104/6 |
| 17 | 5 | Tellus Avenue Ph II Abdul Kalam Main Road | 149.000 |
| 18 | 5 | Radhe Shyam Avenue | 150.000 |
| 19 | 7 | Shah Avenue | 175/1a |
| 20 | 7 | Koushik Avenue | 175/2a |
| 21 | 7 | Koushik Avenue 1 | 63/2a |
| 22 | 7 | Koushik Avenue 2 | 12.250 |
| 23 | 7 | Saravana Nagar | 124/2. |
| 24 | 7 | Thirumalai Nagar 1st Part | 147/1. |
| 25 | 7 | VGP Srinivasa Nagar North | 172/2. |
| 26 | 7 | Saraswathi Nagar | 173/1. |
| 27 | 7 | VGP Srinivasa Nagar South | 147/1. |
| 28 | 7 | Alavattamman Koil Street | 19 |
| 29 | 8 | Thirumagal Nagar | 147/2, 178 |
| 30 | 12 | Sri Palaniappa Nagar | 172/2. |
| 31 | 12 | Annai Anjukam Park | 39/2. |

**நகரமைப்பு பிரிவு:**

அறிக்கையாண்டில் நகரமைப்பு பிரிவில் கீழ்காணும் அலுவலர்கள் பணிபுரிந்தனர்.

| வ. எண். | பெயர் | பதவி | பதவி காலம் |
|---|---|---|---|
| 1 | திரு. எஸ். குமார் | நகரமைப்பு ஆய்வாளர் (பொ) | 1.4.2018 முதல் 11.4.2018 வரை |
| 2 | திரு. சங்கர் | நகரமைப்பு ஆய்வாளர் (பொ) | 12.4.2018 முதல் 29.4.2018 வரை |
| 2 | திரு. எஸ். சுகுமார் | நகரமைப்பு ஆய்வாளர் | 30.4.2018 முதல் 31.3.2019 வரை |

கட்டிட உரிமையாணை கட்டணம் இந்நகர் மன்ற தீர்மானம் எண்.48 நாள் 6.8.2013ன் படி கட்டணம் உயர்த்தி வசூலிக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சி பகுதியில் கட்டப்படும் கட்டுமானங்கள் முறையாக கட்டிட அங்கீகாரம் பெறப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. கட்டிட அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டுமானங்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டத்தின்கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டு அங்கீகாரம் பெற ஆவண செய்யப்படுகிறது. அங்கீகாரம் பெறாமல் கட்டிடம் கட்டுபவர்கள் மீது சட்ட ரீதியாக நீதிமன்ற வழக்கு தொடுக்கப்படுகிறது. அறிக்கையாண்டில் 227 எண்ணிக்கை கட்டிட விண்ணப்பங்கள் வரப்பெற்று 203 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 7 எண்ணிக்கை கூடுதல் விவரங்கள் சமர்ப்பிக்க கோரி நிராகரிக்கப்பட்டது. 17 எண்ணிக்கை விண்ணப்பங்களுக்கு கட்டிட உரிமக்கட்டணங்களை தெரிவிக்க அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

## பொறியியல் பணிகள்

நகராட்சி பொறியியல் பிரிவு மூலம் அறிக்கையாண்டில் கீழ்கண்ட திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## திட்ட நிதி

| வ. எண். | திட்டத்தின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1. | **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2018–19**<br>தார் சாலைப் பணிகள் (46 சாலைகள்) | ரூ.250.00 |
| 2. | **தாம்பரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டப் பணிகள்**<br>2017–18 சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்தல்<br>2017–18 உடற்பயிற்சி கூடம் அமைத்தல் | ரூ. 46.25 |
| 3 | **திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டப்பணிகள்**<br>2017–18 LED தெருவிளக்குகள் அமைத்தல் பணி | ரூ.41.00 |
| 4 | **2018–2019–ம் ஆண்டின் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி**<br>13 எண்ணிக்கையிலான Battery Operated Vehicles சப்ளை செய்தல் பணி | ரூ.23.40 |
| 5 | **2018–2019–ம் ஆண்டின் தூய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணி**<br>5 எண்ணிக்கையிலான LCV TATA ACE Vehicles சப்ளை செய்தல் பணி | ரூ.28.00 |

<u>பொது நிதி</u>

| வ. எண். | பணியின் பெயர் | தொகை (ரூ. இலட்சம்) |
|---|---|---|
| 1 | பசுமை உரக்குடில் அமைத்தல் பணி (12 எண்ணிக்கை) | 95.80 |
| 2 | பூங்கா பராமரிப்பு சுற்று சுவர் அமைத்ல் பணி (14 எண்ணிக்கை) | 256.70 |
| 3 | கட்டிட பணிகள் (8 எண்ணிக்கை) | 63.30 |
| 4 | குடிநீர் பணிகள் (15 எண்ணிக்கை) | 56.00 |
| 5 | திடக்கழிவு மேலாண்மை பயோ மைனிங் பணி | 50.00 |
| 6 | மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி (12 எண்ணிக்கை) | 95.80 |
| 7 | மொபைல் டாய்லட் அமைத்தல் பணி (4 எண்ணிக்கை) | 16.00 |
| | மொத்தம் | 683.60 |

அலுவலக கூடுதல் கட்டிடம் ரூ.50.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி துவக்கப்பட்டுள்ளது.

<u>தணிக்கை</u>

2018–2019 ம் ஆண்டு வரை கணக்குகள் முடிக்கப்பட்டு உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை, காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. 2017–2018 ஆண்டு வரை தணிக்கை செய்து முடிக்கப்பட்டுள்ளது. வரவு செலவு திட்டம் 2019-20ம் ஆண்டிற்கு முடிக்கப்பட்டுள்ளது.

<u>பொது குறிப்பு</u>

சென்னை மாநகராட்சியினை ஒட்டி அமைந்துள்ள வேகமாக வளர்ந்து வரும் செம்பாக்கம் நகராட்சியின் சீரான நிர்வாகத்திற்கு ஆணையருடன் ஒருங்கிணைந்து செயல்பட்ட நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், நகரில் உள்ள பிறதுறை அலுவலகங்கள் மற்றும் நகர வாழ் பொது மக்கள் அனைவருக்கும் உளமார்ந்த நன்றியினை இத்தருனத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நகராட்சியின் சீரான நிர்வாகம் செயல்படுத்த ஆலோசணை மற்றும் அறிவுரை வழங்கிய காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை-28 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு மண்டலம் அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
செம்பாக்கம் நகராட்சி.